ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2278/21 - 2022 මැයි මස 06 වැනි සිකුරාදා - 2022.05.06

*2278/21 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டம்**

*1985 ஆம் ஆண்டின் 48 ஆவது மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28ஆவது இலக்க சட்டங்களால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் உப பிரிவு 4(1) மற்றும் பிரிவு 14 ஆகியவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவினால் எனக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதியமைச்சர் எம். யூ. எம். அலி சப்ரி ஆகிய நான், பின்வரும் ஒழுங்குவிதிகளை அறிவிக்கிறேன்.*

**எம். யூ. எம். அலி சப்ரி,**
*நிதியமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2022, மே 06.*

**ஒழுங்குவிதிகள்**

1 இவ்வொழுங்கு விதிகள் “**2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்**” என எடுத்துக்காட்ட முடியும்.

2 இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் 2022 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி முதல் விமான நிலையம் அல்லது துறைமுகத்திற்கு வரும் பொருட்களுக்கு மாத்திரம் பொருந்தும்.

3 2012 ஆம் ஆண்டின் சனவரி மாதம் 02 ஆந் திகதிய 1739/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, விசேட இறக்குமதி உரிமம் மற்றும் கொடுப்பனவுக்கான ஒழுங்குவிதிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்த ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஒழுங்குவிதிகளுக்கு முரண்பாடான ஏதேனும் பிற ஒழுங்குவிதிகள் காணப்படின், இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் அந்த ஒழுங்குவிதிகளுக்கு அப்பாற்பட்டு வலுப்பெறும்.

1A - PG 5839 — 456 (2022/05)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4 2012 ஆம் ஆண்டின் சனவரி மாதம் 02 ஆந் திகதிய 1739/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகள் மற்றும் கொடுப்பனவுக்கான ஒழுங்குவிதிகளின் 3(1)(ஆ) ஆம் இலக்க விதிமுறையானது திறந்த கணக்கு அடிப்படையில் மற்றும் சரக்குக் கணக்கு அடிப்படையில் பின்வருமாறு மட்டுமே அனுமதிக்கப்பட்டு திருத்தப்படுகிறது:

(அ) வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது கடல் கடந்த வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு பெறப்படும் ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்து, ஏற்றுமதி நோக்கங்களுக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்யும் ஏற்றுமதியாளர்கள் ; மற்றும்

(ஆ) மேற்கூறப்பட்ட ஏற்றுமதியாளர்களுக்கு பொருட்களை விநியோகித்து அந்நிய செலவாணியில் கொடுப்பனவுகளைப் பெறும் மற்றும் வணிக வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது கடல் கடந்த வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு பெறப்படும் அந்நிய செலவாணியைப் பயன்படுத்தி அவ்வாறான விநியோகத்திற்காக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கான கொடுப்பனவுகளைச் செய்யும் உள்நாட்டு விநியோகஸ்தர்கள்.

5 மேலுள்ள ஒழுங்குவிதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு இறக்குமதியாளராலும் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள், இலங்கைச் சுங்கத்திலிருந்து பின்வருமாறு விடுவிக்கப்படும்.

(அ) இறக்குமதியாளர், கொடுப்பனவிற்கான வணிக வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது கடல் கடந்த வெளிநாட்டு நாணயக் கணக்கு இறக்குமதியாளருக்கு உள்ளமை குறித்து அவரது உரிமம் பெற்ற வணிக வங்கியினால் வர்த்தக விலைப்பட்டியல் அங்கீகரிக்கப்படல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய பொருட்களை சுங்கத்திலிருந்து விடுவிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக விலைப்பட்டியல் சுங்கத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6 2012 ஆம் ஆண்டின் சனவரி மாதம் 02 ஆந் திகதிய 1739/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகள் மற்றும் கொடுப்பனவுக்கான ஒழுங்குவிதிகளின் 10 ஆம் இலக்க ஆவணங்குளுக்கு எதிராக கொடுப்பனவு (DP) மற்றும் ஆவணங்களுக்கு எதிரான ஏற்பு (DA) விதிமுறைக்கு மேலதிகமாக, மேற்கூறப்பட் ஒழுங்குவிதி இலக்கம் 04 இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் தவிர்ந்த ஆவணங்களுக்கு எதிராக கொடுப்பனவு (DP) மற்றும் ஆவணங்களுக்கு எதிரான ஏற்பு (DA) முறைகளின் கீழ் பொருட்களை இறக்குமதி செய்யும் எந்தவொரு இறக்குமதியாளரும், அவரது உரிமம் பெற்ற வங்கியினால் முன் ஏற்பாடுகளைச் செய்து கப்பலேற்ற அனுப்பப்பட்ட திகதிக்கு முன்னர் புரபோமா விலைப்பட்டியல் ஒப்புதல் பெறப்பட வேண்டும் மற்றும் ஒப்புதல் பெறப்பட்ட விலைப்பட்டியல் கூறப்பட்ட பொருட்களை சுங்கத்திணைக்களத்திலிருந்து விடுவிக்கும் போது சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு பிற ஆவணங்களுடன் சேர்த்து வழங்க வேண்டும்.

7 திறந்த கணக்கு கொடுப்பனவு முறையின் கீழ் கொடுப்பனவுகளைச் செலுத்தும் எந்தவொரு அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியும், ஒவ்வொரு சுங்க அறிவிப்பிற்கும் இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு தீர்வு விவரங்களின் பிரதியை (CUSDEC) மின்னணு வடிவில் பகிரப்படல் வேண்டும்.

8 இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்தினை அடைவதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால், சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கும் உள்ளூர் வங்கிகளுக்கும் "செயற்பாட்டு வழிமுறைகள்" விநியோகிக்கப்படல் வேண்டும்.

9 சுங்கப் பணிப்பாளர் நாயகம், மேற்கூறிய விதிமுறைகளை மீறி மேற்கொள்ளப்படும் இறக்குமதிகளுக்கு சுங்கச் சட்ட விதிமுறை களின் பிரகாரம் செயற்படல் வேண்டும்.

10 இவ்வாறான விதிமுறைகளைத் தீர்ப்பதில் சிக்கல்கள் ஏற்படுமிடத்து, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்துடன் கலந்தாலோசிக்கப்படல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.